13

# மேலாண்மையியல் பார்வையில் வள்ளுவரின் தூது அதிகாரம்

சுரேந்திரன். கு
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆர்.வி.எஸ் கலை அறிவியல் கல்லூரி, சூலூர், கோயம்புத்தூர் - 641 402.
surendrantamil@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் சமூகமயமாகியதன் மிகமுக்கிய விளைவு மொழியாகும். மனிதன் வளர மொழியும்: மொழிவளர மனிதனும் இரண்டற கலந்தே தொடர்ந்து சமூகவயமாக்கல் நடைபெற்றது எனலாம். நாகரிகத்தின் தொடக்ககாலகட்டத்தில் உள்ளத்தில் எழும் கருத்தை பிறரிடத்தில் பகிர்வதில் தொடங்கிய மொழி கலை, இலக்கியம், சமூகம், பண்பாடு என பலபரிமாணங்களில் வளர்ச்சியில் முதன்மைப் பங்காற்றியது. ஆதிப்பொதுவுடமை சமூக மரபிலிருந்து அரசுகள் தோற்றமுற்று நிலவியல் சார்ந்து பெரும்போர்கள் நிகழத் தொடங்கியபோது மொழி தனது உரையாடல் கலையில் தூது என்ற புதியவடிவம் கொண்டது. சங்க இலக்கிய அகப்பாடல்களில் தலைவன், தலைவி இருவருக்கும் இடையில் வாயிலாக தோழி, பாங்கன் ஆகியோர் படைக்கப்பட்டிருப்பினும் புற இலக்கியங்களில் காணப்படும் தூது என்ற பொருளமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. அத்தகைய தூது குறித்தும், தூதுனுக்குரிய பண்புகள் குறித்தும் திருக்குறளிலுள்ள தூது அதிகாரத்தின் வழி மேலாண்மையியல் பார்வையில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** தூது, அகத்திணை, சொல்வன்மை, சான்றோர், கற்றோர்.

**மேலாண்மை - விளக்கம்**

மேலாண்மை, மேலாண்மையியல் என்கிற சொல்லாடல்கள் பெரும்பாலும் வணிகம் மற்றும் தொழில் நிறுவங்கள் சார்ந்த ஒன்றாகும். மேலும் இது ஒரு செயல்முறை சார்ந்ததாகவும் இருக்கின்றது. இதனை நிர்வாகத்தினரால் செய்யப்படும் கலை எனலாம். இதனடிப்படையில் மேலாண்மை என்பதை ஒரு தனித்துவமான செயல்முறை, திட்டமிடல், ஒழுங்கமைத்தல், செயல்படுத்துதல ;மற்றும் கட்டுப்படுத்துதல், மனிதர்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் குறிக்கோளைத் தீர்மானிக்கவும், நிறைவேற்றி வெற்றியடைவும் மேற்கொள்ளப்படுவது எனலாம். வணிகம் மற்றும் நிர்வாகம் என்ற நிலைகளில் மேற்கூறப்பட்ட மேலாண்மைக்குரிய விளக்கத்தோடு காலத்திற்கேற்ப பல்வேறு விளக்கங்களும், புதிய வரையறைகளும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இருப்பினும் மேலாண்மையியல் அடிப்படையில் இலக்கியத்தை ஆய்கின்றபோது அதற்குரிய ஏனைய மரபான வரையறைகளுடன் அப்படியே ஆய்தல் என்பது முழுமையானதாக அமையாது. மேலாண்மை மற்றும் மேலாண்மையியலின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகளுடன் இலக்கியத்தை ஆராய்வது சிறந்ததாக இருக்கும். அவ்வகையில்

மேலாண்மையியல் பார்வையில் வள்ளுவரின் தூது அதிகாரம் எனும் இக்கட்டுரையில் செயலை வெற்றிகரமாக திறம்பட செய்து முடிக்கின்ற செயல்முறை சார்ந்ததாக தூது செல்வதை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**தொல்காப்பியத்தில் தூது**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பேரிலக்கியத்தின் நான்கு உறுதிப்பொருட்களுள் ஒன்றோ அல்லது சிலவோ குறைந்து பாடப்படும் சிற்றிலக்கியங்களின் பொற்காலமான பொதுஆண்டு 14 ஆம் நூற்றாண்டில்தான் தூது எனும் தனித்த இலக்கிய வகைமை தோன்றினாலும், தூது பண்டையகாலம் தொட்டு தமிழ்ச் சமூகத்தில் ஊடாடி வந்துள்ளது எனலாம்.

தொல்காப்பியத்தில் தூது செல்வோரை அகத்துறை சார்ந்து "வாயில்கள்" என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இதனை,

**"தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாட்டி இளையவர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவோர் காண்போர்**
**யாத்;த சிறப்பின் வாயில்கள் என்ப" (1)**

**(தொல் - பொருள் - கற்பியல் - நூற் 52)**

என்ற நூற்பாவின் வழி அறியலாம். மேற்கூறப்பட்டுள்ள பன்னிருவரும் கற்பின்கண் வாயில்களாக அமைவர் என்று இளம்பூரணர் விளக்குகின்றார். இவர்கள் கற்பியலில் கூறப்பட்டுள்ளதால் தலைவன் மற்றும் தலைவிக்குமிடையே காதல் மற்றும் ஊடல் பொழுதுகளில் வாயில்களாக இருப்பர் என்பது புலனாகிறது. எனவே சங்க அகத்துறையில் அதன் மரபிற்கேற்ப தூது என்பது தலைவன் மற்றும் தலைவி எனும் இருவருக்குமிடையே தனிப்பட்டவொன்றாக நிகழ்ந்தது எனலாம். அதேவேளையில் புறத்துறையில் தூது பற்றிகுறிப்பிடும் போது,

**"ஓதல் பகையே தூதிவை பிரிவே" (2)**

**(தொல் - அகத்திணை- நூற் 27)**

என்கிறார் தொல்காப்பியர். இந்நூற்பாவிற்கு உரை கூறும் இளபூரணர் ஓதலும் பகையும் தூதும் என்று சொல்லப்பட்ட இத்தன்மை பிரிவிற்கு நிமித்தமாம் என்கிறார். மேலும் அதை விளக்கிக் கூறிடும்போது தூதைப் பற்றி, தூதிற்குப் பிரிதலாவது இருபெருவேந்தரைச் சந்துசெய்தற் பொருட்டுப் பிரிதல் என்கிறார். அதனையடுத்து வருகின்ற

**"அவற்றுள்**
**ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (3)**

**(தொல் - அகத்திணை- நூற் 28)**

எனும் நூற்பாவிற்கு உரை கூறும் இளம்பூரணர் 'ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவும், தூதாகிப் பிரியும் பிரிவும் நால்வகை வருணத்தினும் உயர்ந்த அந்தணர்க்கும் அரசர்க்கும் உhயி என்று கூறி

மேலும் அதனை இவர் ஒழுக்கத்தானும் குணத்தானும், செல்வத்தானும், ஏனையரினும் உயர்புடையராதலின் 'உயர்ந்தோர்' என்றார் என்றும், அரசர்தாம் தூதாகியவாறு வாசுதேவனால் உணர்க என்றும் கூறுகிறார். இதற்கு எடுத்துக்காட்டாக மதுரை வேளாசான் பாடிய பின்வரும் புறநானூற்றுப் பாடலைத் தருகின்றார்.

**"வயலைக் கொடியின் வாடியமருங்கில**
**உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்**
**எல்லி வந்து நில்லாது புக்குச்**
**சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே**
**ஏணியும் சீப்பும் மாற்றி**
**மாண்வினை யானையு மணிகளைந் தனவே" (4) (புறம் - 305)**

மேற்கூறப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடல் தூது எனும் வகைமைக்குள் வரவில்லை. முதலாவதாக இருபெரும் வேந்தரை சந்து செய்வதற்கானதாக பாடலில் குறிப்பிடவில்லை. இரண்டாவதாக தூதனாக வந்த செய்தியினை முறையாக வாயில் காவலனுக்கு அறிவிக்காமல், முன் அனுமதிபெறாமல், தனியனாய் இரவுநேரத்தில் சென்று அரசனைச் சந்திப்பதும்; தூது என்பதன் பொருண்மைக்குள் வரவில்லை. மூன்றாவதாக அரசனைக் காணவந்த பார்ப்பானின் தோற்றத்தைக் கூறும் போது வாடிய இடையினையும், வருந்துதலையுடைய ஊர்ந்துசெல்லும் நடையினையும் உடைய இளைய பருவத்தினன் என்று உணரமுடிகின்றதேயன்றி தொல்காப்பியர் கூறும் 'உயர்ந்தோர்' என்பதற்குண்டான அடையாளத்தைத் தருவதாக காணமுடியவில்லை. மேலும் 'உயர்ந்தோர்' என்பதற்கு பிறப்பின் அடிப்படையில் வருகின்ற வருணப் பிரிவினைக் கொள்ளலாமா என்பது தனித்த ஆய்வுக் களமாக விரிகின்றது. இருப்பினும் திருக்குறளை வழிக் கொண்டு அதற்கு விடை காணவும் இக்கட்டுரை முயல்கிறது.

**திருக்குறளில் தூது அதிகாரம்**

தூது எனும் அதிகாரம் திருக்குறளில் அறுபத்தொன்பதாவது அதிகாரமாக பொருட்பாலில் அங்கவியல் எனும் பிரிவில் இடம்பெற்றுள்ளது. தூது செல்வதை பெரும்பாலும் ஆண்பாலிற்குரியதாகவே வள்ளுவர் குறிப்பிடுகின்றார். தூது எனும் அதிகாரத்திலுள்ள பத்து குறட்பாக்களுள் "தூதுரைப்பான், வினையுரைப்பான், செறிவுடையான், அஞ்சான், எண்ணியுரைப்பான், வழியுரைப்பான், உரைப்பான்" என ஏழுகுறட்பாக்களில் 'அன்' எனும் ஆண்பால் விகுதி கொண்டதாக தூது செல்பவரைக் குறிப்பிடுகின்றார். மேலும் ஒருகுறளில் 'தூதுரைப்பார்' என்று பொதுவாகவும், ஏனைய இரண்டு குறட்பாக்களில் 'தூது' என்றும் குறிப்பிடுகின்றார். இதன் அடிப்படையில் தூது செல்வதற்குரியவராக ஆண்பாலை வலியுறுத்துவதாக் கொள்ளலாம். இதற்கு காரணமாக திருக்குறள் தோன்றிய காலகட்டத்தோடு இதைபொருத்திப் பார்ப்பது பயனளிக்கும். திருக்குறள் சங்ககாலத்தையடுத்து வந்த சங்கம் மருவிய

கால இலக்கியாகும். அதற்கு முன் தோன்றியசங்க இலக்கியங்களில் ஆதிப்பொதுவுடைமை இனக்குழுசமூகத்தின் எச்சம், குடித்தலைவனிலிந்து அரசன் உருவாதல், அரசுகளின் தோற்றம், சமூக மற்றும் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றம், பேரரசுகள் உருவாதல், அவற்றிற்கிடையிலானபோர், தாய்வழிச் சமூகத்தில் முதன்மை பெற்றிருந்த பெண், ஆண்மையச் சமூகமாக மாற்றமுற்றவுடன் பின்னுக்குத்தள்ளப்பட்டு அனைத்து நிலைகளிலும் ஆண் முதன்மையிடம் பெறல் என பல்வேறுநிலைகளைக் காணலாம்;. இதற்குச் சான்றாக,

**"ஈன்று புறந் தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" (5) (புறம் - 312)**

என்ற பாடலை சான்றாகக் காட்டலாம். இப்பாடலில் பெண்ணிற்குரிய கடமையாக பிள்ளையைப் பெற்றுக் கொடுத்தல் என்பதோடு மட்டும் முடிந்து விடுகிறது. பிள்ளையைச் சான்றோன் ஆக்குதல் தந்தைக்குரியதாக கூறப்படுகிறது. மேலும்,

**"… … …**
**ஈன்ற வயிறோ இதுவே**
**தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே" (6) (புறம் - 86)**

ஏன்ற காவற்பெண்டு பாடிய புறநானூற்றுப் பாடலும் அவனை ஈன்ற வயிறு இங்கே இருக்கிறது. அவனோ போர்க்களத்தில் தோன்றும் இயல்பையுடையவன் என கூறுகின்றது. மேற்கூறப்பட்டு;ள்ள இரண்டு சங்கப் பாடல்களும் ஆண்மையச் சமூகத்தின் வளர்ச்சியையும்,; ஆண் முதன்மை பெறுகின்ற காரணத்தையும் சமூகத்தில அதன் தாக்கத்தையும் அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் வள்ளுவர் வாழ்ந்த காலகட்டம் என்பது ஆண்மையச் சமூகம் நிலைபெற்ற ஒன்றாக நிலவியதை அறியமுடிகிறது. இதன்பொருட்டே வள்ளுவர் தூது செல்வபவராக ஆண்பாலை வலியுறுத்தியுள்ளார் எனலாம்.

'பிறருடைய இங்கிதம், ஆகாரம், செயல்களையறிதல், மறவின்மை, காலம் இடம் அறிந்து செய்தல், சந்தி விக்ரம் முதலிய ஆறு குணங்களையும் ஆராய்ந்து அறிதல், சொல்வன்மை, அஞ்சாமை முதலிய குணங்களுடையவன்' (7) என தூதுன் என்பதற்கு அபிதான சிந்தாமணி விளக்கம் கூறுகிறது.

**தூது செல்வோருக்குரிய பண்புகள்**

1. அன்பான குணம்
2. புகழ் வாய்ந்த குடிப்பிறப்பு
3. சிறந்த பண்புகள்
4. அறிவில் சிறந்திருத்தல்
5. ஆராய்ந்து பேசும் சொல்வன்மை

6. தோற்றப் பொலிவு
7. கல்வியில் சிறத்தல்
8. அஞ்சாதிருத்தல்
9. காலம், இடம் அறிந்து செயல்படல்
10. தூய நடத்தை கொண்டிருத்தல்

என மேற்கூறப்பட்டுள்ள பத்து பண்புகளை தூது செல்பவருக்குரியதாக வள்ளுவர் கூறுகின்றார். ஊன்று கவனித்தால் மேலாண்மையியலுக்கச் சொல்லப்படுகின்ற தனித்துவமான செயல்முறை இருப்பதை காணமுடியும். தூதாக செல்வோர் தூது செல்வதன் நோக்கம். தூதாக செல்லக்கூடிய நாடு, அதன் அரசன் பற்றி முன்கூட்டிளே திட்டமிட்டு, என்ன பேச வேண்டும் அதை எவ்வாறு பேச வேண்டும் என ஒழுங்கமைத்துக் கொண்டு, தன் கல்வித்திறம், அறிவு, சொல்வன்மை ஆகியவற்றை முறைப்படுத்தி அவைக்கு அஞ்சாது காலம் மற்றும் இடம் அறிந்து துணிந்து பேசிடும் தன் தூய நடத்தையால் தான் வந்த நோக்கமாகிய தூது வெற்றிகரமாக நடைபெற்று முடிய திறம்பட்டவராக இருக்க வேண்டியதன் அவசியத்தை மிகச் சிறந்த மேலாண்மையியல் நோக்கில் வள்ளுவர் இந்த தூது என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார் எனலாம். சான்றாக தூது செல்வோருக்குரிய பண்புகளைக் கூறுமிடத்து,

**“அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு**
**இன்றி யமையாத மூன்று” (8) (குறள் - 682)**

இதில் கூறப்பட்டுள்ள சொல்வன்மை என்பதற்கு காட்டாக

**“திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனினூஉங்கு இல்” (9) (குறள் - 644)**

சொல்லுகின்ற கருத்தை திறனறிந்து சொல்ல வேண்டும் என்றும், அதையும் கேட்டாரும், கேளாதாரும் விரும்புகின்ற வகையிலும் (குறள் - 643), பிறிதோர் சொல் வெல்ல இயலாத வண்ணம் (குறள் - 645) சொல்ல வேண்டும் என்கிறார். மேலும் தூதாக செல்பவர் காலமறிந்து பேச வேண்டியதன் அவசியத்தை,

**“கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொத்த சீர்த்த இடத்து” (10) (குறள் - 490)**

காலமறிதல் எனும் அதிகாரத்தில் அதற்குண்டான விளக்கத்தைத் தருகிறார். இவ்வாறு தூது செல்வோருக்குரிய பண்பாக வள்ளுவர் கூறியுள்ள பலவும் மிகச் சிறந்த மேலாண்மையியல் சிந்தனை கொண்டிருப்பதை இவ்வாய்வு முடிவு கூறுகிறது. மேலும் வள்ளுவப் பெருந்தகை கூறுகின்ற தூதிற்குரிய பண்புகளும், சொல்வன்மையும், காலமறிந்து, கேட்போர் உள்ளம் உணரும் வண்ணம் சிறந்த மேலாண்மைத் திறனும் ஆளுமைத்திறனும் கொண்ட தூதாகச் சென்று வென்றதைச் சங்க இலக்கியமான புறநானூற்றுப் பாடல்களில் காணலாம். சான்றாக,

**"இவ்வே பீலி அணிந்து, மாலை சூட்டி**
**கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,**
**… … … … … … … … …**
**ஆண்ணல் எம் கோமான், வைந் நுதி வேலே" (11)**

**(புறம் - 86)**

என்ற புறநானூற்றுப் பாடலில் அதியமான் பொருட்டு தொண்டைமானிடம் தூதாகச் சென்ற ஔவையார், அதியமானின் வலிமை அறியாது போர் தொடுக்க முற்பட்;ட தொண்டைமானிடம் அதியனின் படைவலிமை, போர்த்திறம், படைக்கலத்தின் தன்மை போன்றவற்றை எடுத்துக் கூறி தொண்டைமானுக்கு உண்மையை உணர்த்திய பாங்கினைச் கூறலாம். மேலும் சோழர்களான நலங்கிள்ளி மற்றும் நெடுங்கிள்ளி இருவருக்குமிடையில் கோவூர்க்கிழார் தூதராகச் சென்று போரை நீக்கினார் (புறம் - 45) என்பதையும், இவரே சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலையமானின் மக்களை யானைக் காலில் இட்டுக் கொல்ல முற்படும் போது அதனை நீக்கினார் (புறம் - 46) என்றும், தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்த குமணனைக் கண்டு, அவன் தன் வாள் கொடுப்பக் கொண்டு வந்து, இளங்குமணற்குக் காட்டி, அவன் தான் செய்த தவறை உணரும் வண்ணம் பெருந்தலைச் சாத்தனார் பாடினார் (புறம் - 165) என்றும் காணமுடிகிறது. மேலும் இப்பாடல்கள் தூது செல்லும் நோக்கத்தோடு சென்றோ அல்லது சென்றவிடத்து தூதாகப் பேசியதாகவே இதே பொருளமைந்து பாடிய பாடல்களாகும். இம்மூன்று பாடல்களின் அடிப்படையில் பார்க்கும் போது **'உயர்ந்தோர்'** என தொல்காப்பியர் கூறியதற்கு **'பார்ப்பனர்'** என இளம்பூரணர் கூறுவதற்கு மாற்றாக சான்றோர், கற்றோர், அறிவில் சிறந்தோர், சொல்வன்மை மிக்க யாவரும் தூதாகச் செல்லலாம் என்ற முடிவினை இவ்வாய்வுக்கட்டுரை முன்வைக்கிறது. ஏனெனில் வள்ளுவர் **"ஆன்ற குடிப்பிறப்பு"** என்று கூறுவதற்கு நற்பெயரும், புகழும் வாய்ந்த குடியில்; பிறத்தல் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். ஆதற்கு மாற்றாக பிறப்பின் அடிப்படையில் பொருள் கொள்வதென்பது **"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"** என்ற வள்ளுவத்தின் உயரிய கொள்கைக்கு மாறானதாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**ஆய்வு முடிவுகள்**

1. மேலாண்மை, மேலாண்மையியல் என்பவை தற்கால வணிகம் மற்றும் நிறுவனங்கள் சார்ந்ததாக இருப்பினும் தமிழரின் வாழ்வியலில் பண்டைய காலந்தொட்டு அந்தந்த காலச் சூழலுக்கேற்ப இலக்கியங்களில் மேலாண்மைத் தன்மைகள் காணப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

2. தூது என்ற் இலக்கிய வடிவம் பிற்காலத்தைச் சார்ந்ததாக இருப்பினும், தூது என்பது அதன் பொருளில் சங்க காலம் முதற்கொண்டே தமிழ்ச் சமூகத்தில் இரண்டறக் கலந்து வந்துள்ளதை அறிய முடிகிறது.

3. சங்க காலத்தில் தூது அகத்துறை சார்ந்து, புறத்துறை சார்ந்தது என இருநிலைகளில் இருந்ததை அறிய முடிகிறது.

4. திருக்குறளில் மேலாண்மையியல் சார்ந்த கருத்துகள் பல்வேறு அதிகாரங்களில் கூறப்பட்டிருப்பினும் தூது எனும் அதிகாரத்தில் மிகவும் சிறப்பாக கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

5. தொல்காப்பியர் கூறும் **'உயர்ந்தோர்'** என்பதற்கு வருணப்பாகுபாட்டின் அடிப்படையில் இளம்பூரணர் கூறும் **'பார்ப்பனர்'** என்பதை சங்க இலக்கியப்பாடல்கள் மற்றும் திருக்குறளில் தூது எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள **'ஆன்ற குடிப்பிறப்பு'** என்பதைத் துணையாகக் கொண்டு மறுத்து, அதற்கு மாற்றாக **சான்றோர், கற்றோர், அறிவில் சிறந்தோர், சொல்வன்மை மிக்க யாவரையும் தூதாகச் செல்லலாம்** என்பதே தொல்காப்பியர் கூறிடும் **'உயர்ந்தோர்'** என்ற பதத்திற்கு பொருத்தமாக இருக்கும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**புதிய ஆய்வு கண்டுபிடிப்பு**

1. தொல்காப்பியர் கூறும் **'உயர்ந்தோர்'** என்பதற்கு வருணப்பாகுபாட்டின் அடிப்படையில் இளம்பூரணர் கூறும் **'பார்ப்பனர்'** என்பதை சங்க இலக்கியப்பாடல்கள் மற்றும் திருக்குறளில் தூது எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள **'ஆன்ற குடிப்பிறப்பு'** என்பதைத் துணையாகக் கொண்டு மறுத்து, அதற்கு மாற்றாக **சான்றோர், கற்றோர், அறிவில் சிறந்தோர், சொல்வன்மை மிக்க யாவரையும் தூதாகச் செல்லலாம்** என்பதே தொல்காப்பியர் கூறிடும் **'உயர்ந்தோர்'** என்ற பதத்திற்கு பொருத்தமாக இருக்கும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**துணை நூற்பட்டியல்**


1. தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்), இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
2. தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்), இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
3. தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்), இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
4. புறநானூறு (மூலமும் உரையும்) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
5. புறநானூறு (மூலமும் உரையும்) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
6. புறநானூறு (மூலமும் உரையும்) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
7. திருக்குறள், (புதிய உரை), புலியூர்க்கேசிகன் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
8. திருக்குறள், (புதிய உரை), புலியூர்க்கேசிகன் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
9. திருக்குறள், (புதிய உரை), புலியூர்க்கேசிகன் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
10. திருக்குறள், (புதிய உரை), புலியூர்க்கேசிகன் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
11. புறநானூறு (மூலமும் உரையும்) நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.